**MCOP.No. 24/2021**

**Date:17.11.2025**

**ம.சா 1. சீத்தாலட்சுமி**

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு நடந்த விபத்தை பற்றி நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்து சமயத்தில் எனது மகன் கஜேந்திரன், பட்டமுத்து குமார் மற்றும் மாரித்துரை ஆகிய மூவரும் டிராக்டரில் செல்லும் போது தான் இந்த விபத்து நடந்தது. மாரித்துரை என்பவர் டிராக்டரை ஓட்டி சென்று கொண்டிருந்தார். டிராக்டரை ஒரு இடத்தில் நிப்பாட்டி விட்டு பாத்ரூம் சென்றுவிட்டு திரும்பி வந்து எனது மகன் டிராக்டரில் ஏறும் போது தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். மேற்படி டிராக்டர் விவசாய பாயன்பாட்டிற்கு மட்டுமே காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஓட்டுநரை தவிர வேறு யாரும் பயணம் செய்ய அனுமதி கிடையாது. அதில் எனது மகன் பயணியாக தான் பயணம் செய்தார். எனது மகன் வெல்டிங் வேலை செய்து வந்தார் என்றாலும் அதன் மூலம் மாதம் 20000 ரூபாய் வருமானம் ஈட்டி வந்தார் என்று சொல்வது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் நின்றுகொண்டிருந்த டிராக்டர் கியரை இழுத்ததால் தான் வலது பக்க பின் பக்க சக்கரம் அவர் மீது ஏறி விபத்து நடந்தது என்றால் சரியல்ல. மேற்படி டிராக்டர் உரிமையாளர் விவசாய வேலைகளுக்கு மட்டும் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டதை மீறி தன்னுடைய டிராக்டரில் பயணிகளை பயணம் செய்ய அனுமதித்து காப்பீட்டு நிபந்தனை மற்றும் விதிகளை தெரிந்தே மீறியுள்ளார் அதனால் மூன்றாம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் எவ்வித இழப்பீட்டு தொகை செலுத்த பொறுப்புடைமை ஆகமாட்டார் என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது மகனின் வயது மற்றும் வேலை குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகமானது என்றாலும் எங்களுக்கு மேற்படி தொகை கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.

டிராக்டர் ஓட்டுநர் இந்த விபத்திற்கு எந்த விதத்திலும் காரணம் இல்லை என்றாலும் இறந்து போன எனது மகனே முழு பொறுப்பாவார் என்றாலும் சரியல்ல.

1,2 எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லலை. குறுக்கு விசாரணை இல்லை.